மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: தலைவரவர்களே, ஆய்வாளர்கள் இல்லை என்றால் அந்த விவரத்தைக் கொடுத்தால் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும். ஆடுமாடுகளை இன்ஷ்யூர் செய்திருந்தால் நஷ்டயீடு கொடுக்கப்படும்.

திரு. துரைமுருகன்: தலைவரவர்களே, இந்தக் கோமாரி நோய்க்குத தடுப்பு ஊசி இலவசமாகப் போடுவது இல்லை என்று சொன்னார்கள். அதற்கு என்ன காரணம் என்று தெரிவிப்பார் களா? இரண்டாவதாக விவசாயிகளே வாங்கி வைத்துக்கொள்ள வேண்டுமென்று சொல்லுகிறார்கள். அதற்கு 50% மானியம் அளிப்பதாகவும் சொன்னார்கள். அதன் விலை எவ்வளவு? ஒரு மாட்டுக்குக் கோமாரி நோய் வந்தால் எவ்வளவு ஊசி போட வேண்டும் என்பதை அறிவிப்பார்களா?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: தலைவரவர்களே, ஒரு ஊசி விலை 8 ரூபாய். கோமாரி நோய் பலவிதமான நுண் கிருமிகளால் ஏற்படுகிறது. ஒவ்வொரு வகை நுண் கிருமிக்கும் ஒவ்வொரு வகையான ஊசி போட வேண்டியிருக்கிறது. ஆகையால் ஒரு ஊசி போட்டால் அந்த நோய் தீர்ந்துவிடும் என்று சொல்ல முடியாது. ஆகையால் நுண் கிரிமிகளின் தன்மையை அறிந்து ஊசி போட வேண்டியது மிகவும் முக்கிய மாகும்.

உடையார் பாலளயத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்கும் திட்டம்

*வினா எண். 754 திரு. பி தங்கவேலு: மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா:

(அ) திருச்சி மாவட்டம் உடையார்பாளையத்தில் கால்நடை மருத்துவமனை அமைப்பது குறித்து அரசிடம் ஏதேனும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் இந்தக் கால் நடை மருத்துவமனை எப்போது துவங்கப்பெறும்?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்:— (அ) இல்லை.

(ஆ) இவ் வினா எழாது.

திரு. த. ஆறுமுகம்: தலைவரவர்களே, உடையார்பாளையம் ஒரு வட்டமாக இருப்பதாலும், அந்தப் பகுதியில் அதிகமான கிராமங்கள் இருப்பதாலும், அந்தப் பகுதி பின்தங்கிய பகுதியாக இருப்பதாலும் இந்த ஆண்டு அந்த மருத்துவனை தொடங்கப் படுமா?

1981 ஏப்ரல் 14]

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: தலைவரவர்களே, உடையார்பாளையம் ஜெயங்கொண்டம் ஊராட்சி ஒன்றியத்தில் இருக்கிறது. ஜெயங்கொண்டம் ஊராட்சி ஒன்றியத்தில் பெரிய தா த்தில்ஒரு கால்நடை மருந்தகமும், மீன்சுருட்டியில்ஒரு கால் நடை மருந்தகமும் இருக்கின்றன. உடையார்பாளையத்தில் ஒரு மருந்தகம் ஏற்படுத்தினால் அது அந்த ஊராட்சி ஒன்றியத்தில் 3-வது மருந்தகமாகும். மேலும் அந்த வட்டாரத்தில் உள்ள கால்நடைகளின் எண்ணிக்கை 10,065 ஆணையரிடம் விவரம் கேட்டதில், அங்கே ஒரு மருந்தகம் அமைக்கப்படுவதற்கான விவரங்கள் கிடைக்கவில்லை. ஆகையால் அங்கு கால்நடை மருந்தகம் அமைக்கும் உத்தேசம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு:— ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்]

3. உரிமைப் பிரச்சினை

உறுப்பினர் திரு ரகுமான்கான்தான் மீது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. அ. ரகுமான்கான் அவர்கள்மீது திரு. மி. வின்சென்ட் அவர்கள் அவையில் அவை உரிமை மீறல் பிரச்சினை ஒன்றை எழுப்ப அனுமதி கேட்டுள்ளார். அதற்கு அனுமதி அளிக்கப்படுகிறது. அவை உரிமை மீறல் எப்படி ஏறபட்டுள்ளது என்பது குறித்து மிகச் சுருக்கமாகக் கூறும்படி கேட்டுக் கொள்கிறேன்.

திரு. மி. வின்சென்ட்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சட்டமன்ற விதி 246—ன்படி அவை உரிமைப் பிரச்சனை ஒன்றை எழுப்ப விரும்புகிறேன். 7-4-81-ம் நாள் சட்டமன்றத்தில் தமிழ்நாடு 1981—ஆம் ஆண்டு இன்றியமையாத பணிகள் குறித்த சட்ட முன்வடிவின்மீது மாண்புமிகு உறுப்பினர் திரு அ. ரகுமான்கான் அவர்கள் பேசும்போது அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தனது தேர்தல் அறிக்கையில் காவல் துறையைச் சேர்ந்தவர்கள் வேலை நிறுத்தம் செய்யலாம் அதற்கு உரிமை தரலாம் என்று தேர்தல் அறிக்கையில் நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லியுள்ளார்கள் என்று சட்டசபையில் குறிப்பிட்டார் அதற்குத் தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவரவர்கள் எழுந்து, திரு. ரகுமான்கான்கான் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்; எது உண்மையோ அதைச் சொல்லுங்கள் என்றும், தேர்தல் அறிக்கையில் அப்படிப்பட்ட வாசகம் இல்லை என்றும் உடனே சபையில் மறுத்தார்கள். ஆனால் திரு. ரகுமான்கான் அவர்கள் வழக்கம் போல் தன்னிடம் ஆதாரம் இருக்கிறது